# ஆகஸ்ட்– 30 – வியாழன்

## புனித பெலிக்ஸ்

## விழிப்பாயிருங்கள் உங்கள் ஆண்டவர் எந்தநாளில் வருவார் என்று உங்களுக்கு தெரியாது'' (மத். 24:42)

### முதல் வாசகம் : 1 கொரிந்தியர்1: 1 - 9

கொரிந்து நகரிலுள்ள கடவுளின் திருச்சபைக்கு அவர் திருவுளத்தால் கிறிஸ்து இயேசுவின் திருத்தூதனாக அழைக்கப்பட்ட பவுலும் சகோதரராகிய சொஸ்தேனும் எழுதுவது. இயேசு கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்றுத் தூயோராக்கப்பட்டு இறைமக்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ள உங்களுக்கும், எல்லா இடங்களிலும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடும் யாவருக்கும்,நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக! இயேசு கிறிஸ்து நமக்குமட்டும் அல்ல, அனைவருக்கும் ஆண்டவர்.கிறிஸ்து இயேசுவின் வழியாக நீங்கள் பெற்றுக்கொண்ட இறையருளை முன்னிட்டு உங்களை நினைத்து என்கடவுளுக்கு என்றும் நன்றிசெலுத்துகிறேன்.ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்பெற்றுச் சொல்வன்மையும் நிறையறிவும் பெற்று, எல்லாவகையிலும் செல்வர்களானீர்கள்.மேலும் கிறிஸ்துவைப்பற்றிய சான்று உங்களால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து வெளிப்படுவதற்காகக் காத்திருக்கும் உங்களுக்கு அருள்கொடை எதிலும் குறையே இல்லை.நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் நீங்கள் குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருக்க அவர் உங்களை இறுதிவரை உறுதிப்படுத்துவார்.கடவுள் நம்பிக்கைக்கு உரியவர் தம்மகனும் நம் ஆண்டவருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் நட்புறவில் பங்குபெற உங்களை அவர் அழைத்துள்ளார்.

**பதில்பாடல் :** என் கடவுளே உமது பெயரை எப்பொழுதும்
போற்றுவேன்.

### நற்செய்தி : மத்தேயு 24 : 42 – 51

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களிடம் கூறியதாவது : விழிப்பாயிருங்கள் ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது.இரவில் எந்தக் காவல் வேளையில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளருக்குத் தெரிந்திருந்தால் அவர் விழித்திருந்து தம்வீட்டில் கன்னமிடவிடமாட்டார் என்பதை அறிவீர்கள்.எனவே நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார். ”தம்வீட்டு வேலையாள்களுக்கு வேளாவேளை உணவு பரிமாறத் தலைவர் அமர்த்திய நம்பிக்கைக்கு உரியவரும் அறிவாளியுமான பணியாளர் யார்? தலைவர் வந்து பார்க்கும் போது தம்பணியைச் செய்துகொண்டிருப்பவரே அப்பணியாளர். அவர் பேறுபெற்றவர். அவரைத் தம் உடைமைகளுக்கெல்லாம் அதிகாரியாக அவர் அமர்த்துவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். அப்பணியாள் பொல்லாதவனாய் இருந்தால், தன் தலைவர் வரக் காலந்தாழ்த்துவார் எனத் தன் உள்ளத்தில் சொல்லிக்கொண்டு,தன் உடன் பணியாளரை அடிக்கவும் குடிகாரருடன் உண்ணவும் குடிக்கவும் தொடங்குவான்.அப்பணியாள் எதிர்பாராதநாளில், அறியாதநேரத்தில் அவனுடைய தலைவர் வருவார்.அவர் அவனைக் கண்டந்துண்டமாய் வெட்டி வெளி வேடக்காரருக்கு உரிய இடத்திற்குத் தள்ளுவார். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.“ என்றார்.

**தியானம் :** கடவுள ́மேல் நாம் கொண்டுள்ள பக்தி, நம்பிக்கை தேவையானது தான், அந்த நம்பிக்கையில் நிலைத்திருந்து நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். விழிப்பாயிருங்கள் ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது என்கிறார். ஏனெனில் நாம் வாழும் இன்றைய உலகில் அதிகரித்திருக்கும் குழப்பங்கள், போராட்டங்கள் மலிந்திருப்பதையும் நாம் காண்கிறோம். ஆகவேதான் விழிப்பாயிருங்கள் என்ற இயேசுவின் வார்த்தை நம் மக்களுக்கு ஞான ஒளியாக இருக்கட்டும். எதிர்கால நிகழ்வுகளை நிகழ்காலத்தில் நாம் கண்டுகொள்வது ஒருவித விழிப்பு. கொரிந்திய மக்களின் மத்தியில் வளங்கிய அருளுக்காக புனித பவுல் இறைவனுக்கு நன்றி கூறுகிறார். இறையருள் அவர்கள் மத்தியில் இருந்ததினால் அவர்கள் சொல் வல்லமையிலும், அறிவுத் திறனிலும் வளம் பெற்றார்கள் என இன்றைய முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். கடவுள் நம்பிக்கைக்குரியவர் ஆகவே அவர்மேல் நம்பிக்கை கொண்டுள்ள எந்தவொரு ஊழியனும் நம்பிக்கைக்குரிய வாழ்வையே கொண்டிருகிறான். எனவே தான் நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படையாக இருப்பதும், எம் ஒவ்வொருவரையும் நற்பணியாளர்களாக மாற்றுவதும் இறைநம்பிக்கையே.